முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

இ.ம. எண். 26/2018

நிறைவேற்றுகை மனு எண் 27/2017

இன்று 2023 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16 ம் நாள் இன்று இந்த ம.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | வெள்ளியங்கிரி |
| தந்தை பெயர் | : | அய்யாச்சாமி |
| வயது | : | 41 |

முதல் விசாரணை

மனுதாரர் ஆஜர். 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ஆஜர் இல்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். மனுவில் நான் 3 ம் தரப்பினர்.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஆர்.ஆர்.பில்டர்ஸ் என்ற பெயரில் கட்டிட வேலை செய்து வருகிறேன். மனுதாரர் ஜின்னாவை கட்டிட வேலை செய்த வகையில் எனக்கு தெரியும் அவருக்கு 13.8.2013 ம் தேதி நான் கொடுத்த கட்டிட விவர வேலைக்கான செலவு ஆவணம் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் மூலமாக குறியீடு செய்யாமல் சாட்சியின் மூலம் குறியீடு செய்தது தவறு என்றும் ஆவணம் மனு தாக்கல் செய்த பிறகு இன்றைய தேதியில் மனுவிற்காக தயார் செய்யப்பட்டது என்று ஆட்சேபணை செய்தார். இந்த ஆட்சேபணை உத்தரவின் போது கருத்தில் கொள்ளப்படும்)

சாட்சியின் ஆதார் அட்டை ஒளி நகல் **சா.சா.ஆ.2** (நகலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.